[முழுப்பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

# JUNIOR MATH

சூராவத்தை, சுன்னாகம் Victory of Mathematics...!

## 4 – காரணிகளும் மடங்குகளும்

Mathematics | Grade - 7 | One hour

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

| | | |
|---|---|---|
| 4012 | 6395 | 2905 |
| 7000 | 3045 | |
| 5055 | 3908 | 4100 |
| 7585 | 7990 | |

01. 1) 5ஆல் மீதியின்றி வகுபடும் எண்கள் எவை?
2) 10ஆல் மீதியின்றி வகுபடும் எண்கள் எவை?
3) 5ஆலும், 10ஆலும் மீதியின்றி வகுபடும் எண்கள் எவை?

.02. பின்வரும் எண்களின் இலக்கச்சுட்டிகளைக் காண்க.
1) 624 2) 49 3) 127 4) 375 5) 3749
6) 7589 7) 98078 8) 3024 9) 70 549 10) 3 427 649
11) 53 465 12) 31 234 567

03. பின்வருவனவற்றின் இலக்கச்சுட்டிகளை கண்டு மூன்றால் வகுபடும் எண்களை வேறுபடுத்துக.
1) 67 2) 348 3) 4589 4) 40432
5) 234461 6) 7 323 425 7) 987 654 321 8) 3 243 425 327

04. கீழுள்ள எண்கள் மூன்றினால் வகுபடும் எனில் இடைவெளியை நிரப்புக.
1) 4........4 2) 2........27 3) ........2456 4) 23........473
2) 64........1 3) 514........2 6) 23........41 5) 274........

J.Tharani.(B.Sc)

05. பின்வருவனவற்றுள் எவை நான்கால் வகுபடும்?
1) 48 2) 723 3) 6908 4) 2 762 5) 32 718
6) 56 000 7) 475 620 8) 222 222 9) 13528 10) 3542
11) 562 12) 856

06. 6 ஆல் வகுபடக்கூடிய எண்களை வேறுபடுத்துக.
1) 78 2) 534 3) 459 4) 7 545 5) 7 566
6) 6 738 7) 23 652 8) 35 426 9) 65 247 10) 23 434

07. 9 ஆல் வகுபடக்கூடிய எண்களை வேறுபடுத்துக.
1) 387 2) 792 3) 568 4) 3969 5) 2853
6) 4359 7) 20436 8) 35406

08. கீழே தரப்பட்டுள்ள எண்கள் ஒவ்வொன்றும் 9 ஆல் வகுபடும் எனின் வெற்றிடங்களை நிரப்புக.
1) 47..... 2) 5.....1 3) .....75 4) 5.....59
5) 76.....0 6) 470..... 7) .....578 8) 18.....44

09. 1) 5...... என்ற ஈரிலக்க எண் மூன்றினால் வகுபடும் எனின் கீறிட்ட இடத்திற்கு பொருத்தமான இலக்கங்கள் எவை?
2) 5300 இற்கும் 5350 இற்கும் இடைப்பட்ட 3ஆல் வகுபடும் எண்களை எழுதுக.
3) ஒன்றாமிடம் 6 ஆகவுள்ள 4 ஆல் வகுபடும் சாத்தியமான ஈரிலக்க எண்களை எழுதுக.
4) நூறாமிடத்து இலக்கம் 7 ஆகவும் ஒன்றாமிடத்து இலக்கம் 2 ஆகவுமுள்ள 4 ஆல் வகுபடும் மூவிலக்க எண்களை எழுதுக.
5) நான்கால் வகுபடும் எண்களின் சிறப்பியல்புகள் எவை?
6) ஒன்றாமிடத்து இலக்கம் 6 ஆகவுள்ள 6 ஆல் வகுபடும் சாத்தியமான மூவிலக்க எண்களை எழுதுக.

7) பத்தாமிடத்து இலக்கம் 3 ஆகவுள்ள 6 ஆல் வகுபடும் சாத்தியமான மூவிலக்க எண்களை எழுதுக.
8) பத்தாமிடத்து இலக்கம் 4 ஆகவுள்ள 9 ஆல் வகுபடும் மூவிலக்க எண்களை எழுதுக
9) பத்தாமிடத்து இலக்கமும் ஒன்றாமிடத்து இலக்கமும் 2ஆகவுள்ள 9 ஆல் வகுபடும் நாவிலக்க எண்கள் 2 தருக.
10) 43 687 742 என்ற எண் 9 ஆல் வகுபடாது எனக் காட்டுக.
11) 3, 4, 5 என்பவற்றால் வகுக்கும் போது மிதியாக 2 ஐ தரும் மிகச் சிறிய எண் யாது?
12) 5012 என்ற எண் 7 ஆல் மீதியின்றி வகுபடுமா?
13) 4A எனும் எண 6 ஆல் மீதியின்றி வகுபடுமாயின் A இற்கு சாத்தியமான இலக்கங்கள் எவை?

14) வகுபடுதன்மையைப் பயன்படுத்தி அட்டவணையை பூரணப்படுத்துக.

| எண் | 2ஆல் வகுபடும் | 3ஆல் வகுபடும் | 4ஆல் வகுபடும் | 5ஆல் வகுபடும் | 6ஆல் வகுபடும் | 9ஆல் வகுபடும் | 10ஆல் வகுபடும் |
|---|---|---|---|---|---|---|---|
| 324 | | | ✓ | | | | |
| 160 | | | | | | | |
| 2 117 | | | | | | | |
| 2 247 | | | | | | | |
| 1 258 | | | | | | | |
| 225 | | | | | | | |

10. 1) ஓர் எண்ணின் காரணிகள் என்றால் என்ன?
2) முதன்மை எண் என்றால் என்ன?
3) முதலாவது முதன்மை எண் யாது?
4) இரட்டை முதன்மை எண்கள் எத்தனை உள்ளன.
5) முதல் 10 முதன்மை எண்களையும் எழுதுங்கள்.
6) எண்ணும் எண்களுள் முதன்மை எண்கள் அல்லாத எண்களை எவ்வாறு குறிப்பிடலாம்?

11. பின்வரும் எண்களின் காரணிகளை எழுதுங்கள்.
1) 48 2) 72 3) 60 4) 112
5) 135 6) 196 7) 252 8) 496

T.Tharani.(B.Sc)

12. கீழ்வரும் எண்களை இரண்டு காரணிகளின் பெருக்கமாக எழுதி சுட்டி வடிவில் தருக.
1) 18 2) 72 3) 80 4) 96 5) 45

13. வெற்றிடங்களை நிரப்புக.







14. முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுக.
1) 24 2) 56 3) 108 4) 128
5) 270 6) 416 7) 720 8) 840

15. 264 எனும் எண்ணின்
   1) காரணிகளைக் காண்க.
   2) காரணிகளின் எண்ணிக்கையைக் காண்க.
   3) முதன்மைக் காரணிகளை எழுதுக.
   4) முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுக.

16. முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுவதன் மூலம் பொ.கா.பெ ஐ காண்க.
   1) 18, 24   2) 36, 60, 90   3) 54, 72, 108   4) 150, 225, 750

17. முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுவதன் மூலம் பொ.ம.சி ஐ காண்க.
   1) 16, 18, 27   2) 15, 20, 45   3) 24, 36, 54
   4) 56, 63, 84   5) 45, 60, 120   6) 72, 108, 216

18. பொ.கா.பெ ஐ வகுத்தல் முறை மூலம் காண்க.
   1) 48, 72   2) 96, 144   3) 42, 63, 84   4) 126, 147, 168
   5) 132, 242, 396   6) 60, 90, 150, 270   7) 84, 126, 210, 252

19. பின்வருவனவற்றின் பொ.ம.சி ஐ வகுத்தலின் மூலம் காண்க.
   1) 36, 48, 72   2) 28, 42, 56   3) 48, 60, 72
   4) 25, 45, 60   3) 120, 135, 180   4) 3, 33, 333

20. பின்வரும் எண்களின் பொ.கா.பெ, பொ.ம.சி ஐ வகுத்தல் முறை மூலம் காண்க.
   1) 9, 12   2) 8, 16   3) 12, 18   4) 9, 27
   4) 11, 22, 33   5) 34, 51, 85   9) 63, 70, 90   9) 32, 48, 80

21. 72, 108 ஆகிய எண்களை மீதியின்றி வகுக்கும் மிகப்பெரிய எண்ணைக் காண்க.

22. 72, 108 ஆகிய எண்களை மீதியின்றி வகுக்கும் மிகப்சிறியஎண்ணைக் காண்க.

23. $a^2 \times b^2 = 225$ இங்கு a, b என்பன முதன்மை எண்களாகும் எனின் a, b இன் பெறுமானங்களை காண்க.

24. A, B எனும் இரு எண்களின் பொதுக் கரணிகள் 1, 2, 3, 6, 12 எனின் A, B இன் பொ.கா.பெ ஐ காண்க.

25. $a^3 \times b^2 \times c = 360$ a, b, c ஆகியன முதன்மை எண்கள். a, b, c இற்கு பொருத்தமான பெறுமானங்களை காண்க.

26. 42m, 49m, 63m, நீளமான கம்பிகள் சமநீளமான துண்டுகுளாக மிச்சமின்றி வெட்டப்பட வேண்டும். அவ்வாறு வெட்டக்கூடிய மிக நீளமான துண்டுகளின் நீளம் யாது?

27. ஒரு வெளிச்சவீட்டின் வெளிச்சம் 8 செக்கன்களுக்கு ஒரு முறை ஒளிருகின்றது. வேறொரு வெளிச்சவீட்டின் வெளிச்சம் 15 செக்கன்களுக்கு ஒரு முறை ஒளிருகின்றது. இவை இரண்டினதும் வெளிச்சங்கள் நள்ளிரவில் ஒன்றாக ஒளிர்ந்தால் அதன்பின் எப்போது இரண்டு வெளிச்சமும் சேர்ந்து ஒளிரும்?

28. தேசிய பாதையொன்றின் ஓரத்தில் 9m இடைவெளிக்கு ஒரு மின்கம்பம் வீதமும் 12m இடைவெளிக்கு ஒரு தொலைபேசிக்கம்பம் வீதமும் நடப்பட்டுள்ளது. இவ்விரு கம்பங்களும் A என்ற புள்ளியில் சந்தித்த பின்னர் மீண்டும் எவ்வளவு தூரத்தில் சந்திக்கும்?

T.Tharani.(B.Sc)

முடியும் வரை முயற்சி செய்...!
முடியாவிட்டால் பயிற்சி செய்...!

Parent Signature :-....................



சந்தேகங்கள் தீயை வைக்கும், அணைப்பதற்கு அழையுங்கள் 0778281423